DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.190/2021

PROSECUTION WITNESS L.W.4/P.W.5

| | | | |
|---|---|---|---|
| Name | : தாஜூதின் | Caste | : |
| Father's Name | : சின்ராஜ் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 08.07.2025

**முதல் விசாரணை**

1) நான் தற்போது முள்ளாம்பரப்பில் குடியிருந்து வருகிறேன். டீ மாஸ்டராக வேலை செய்து வருகிறேன்.

2) ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவரது கடைக்கு முன்னால் நான் டீக்கடை வைத்துள்ளேன். பட்டியல் சாட்சி -1 துரைசாமி, அ.சா.1 கிருஷ்ணமூர்த்தியை எனக்கு தெரியாது. நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை. இவ்வழக்கு குறித்து எனக்கு எந்த விவரமும் தெரியாது. போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் சாட்சி சொல்ல வந்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:**

1) கடந்த 03.05.2020 ம் தேதி, இரவு 7.30 மணிக்கு நான் எனது டீக்கடையில் இருந்தபோது, பட்டியல் சாட்சி - 1 துரைசாமி அங்குள்ள பைப்பில் தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. அப்போது ஆஜர் எதிரி பைப்பின் அருகே வழித்தடத்தில் சேர் போட்டு உட்கார்ந்து கொண்டிருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. அப்போது துரைசாமி ஆஜர் எதிரியிடம் சேரை தள்ளி போட்டு உட்காருமாறு கூறியதற்கு, ஆஜர் எதிரி துரைசாமியை பார்த்து என் கடை முன்பு நான் அப்படி தாண்டா உட்காருவேன், நீ யாருடா என்னை கேட்பதற்கு என தகாத வார்த்தையால் திட்டினாரா என்றால் நான் பார்க்கவில்லை. அதற்கு துரைசாமி, கெட்ட வார்த்தை எதற்கு பேசுகிறாய் என கேட்டதற்கு மீண்டும் தகாத வார்த்தையால் பேசி, நீ என்னை எதுக்குறாயா என ஆஜர் எதிரி கூறி, அங்கிருந்த கட்டையை எடுத்து துரைசாமியின் தலையின் இடது பக்கம் மற்றும் முகத்தில் ஓங்கி அடித்தாரா என்றால் நான் பார்க்கவில்லை. அப்போது அங்கிருந்த நானும், துரைசாமி தம்பி கிருஷ்ணமூர்த்தியும் ஓடியபோது ஆஜர் எதிரி கட்டையை காட்டி துரைசாமியை பார்த்து, என்னைக்கிருந்தாலும் இந்த கட்டையால் தான் உனக்கு சாவு என கூறி கட்டையை அங்கேயே வீசி விட்டு சென்றாரா என்றால் நான் பார்க்கவில்லை. மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக தெரியாது என்று மாற்றி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

**இல்லை.**

**மறு விசாரணை இல்லை.**

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

/sd/R.Vanjinathan

Judicial Magistrate No.I,

Erode.